**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 184/2022 |
| Name | : Thangaraj |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.12.2024

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கணியூரில் ஆஸ்பத்திரி மேட்டில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அதிகாலை வாய்க்காலுக்கு செல்வதற்காக வெளியே வந்த போது கணியூர் - மடத்துக்குளம் ரோட்டில் வே பிரிட்ஜ் அருகில் 14 நெ. அரசு பஸ் என்னை கடந்து சென்றது. அந்த பஸ் ஒரு நபரின் மீது மோதி டப் என்று சத்தம் கேட்டது. நான் பக்கத்தில் சென்று பார்த்த போது எனக்குதெரிந்த சுப்பிரமணிக்கு தலை மற்றும் கை ஆகிய இடங்களில் அடிபட்டு கிடந்தார். அவர் மீது மோதிவிட்டு பேருந்து சிறிது துரம் சென்று நின்றது. நான் உடனே சுப்பிரணியம் வீட்டிற்கு தகவல் சொன்னேன். பேருந்து நின்றது பேருந்தில் இருந்து இறங்கி வந்தார்கள். ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து அடிப்பட்ட சுப்பிரமணியை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அன்றைய தினம் ஆஜர்

எதிரி தான் அரசு பேருந்தை ஓட்டியவர் ஆவார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இந்த வழக்குச் சம்பவம் செந்தில் வே பிரிட்ஜ் அருகே காலை 05.15 மணிக்கு நான் வந்து கொண்டிருந்த போது 14 நெ.பஸ் மடத்துக்குளத்தில் இருந்து தாராபுரம் போகும் போது நான் பார்த்தேன். டப் என்று சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்தை பார்த்தேன் என்றால் சரிதான். அதற்கு பிறகு என்ன நடந்தது என்று கேட்டுதெரிந்து கொண்டேனா என்றால் நான் போய் பார்த்தபோது சுப்பிரமணி என்பவர் அடிபட்டு கீழே கிடந்தார். அடிபட்டவர் சுப்பிரமணி என்று எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் கீழே விழுந்து கிடந்ததை பார்த்து தெரிந்து கொண்டேன். சத்தம் கேட்டதற்கு முன்பு நடந்து சென்றவர் சுப்பிரமணி தான் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சுப்பிரமணி எப்படி கீழே விழுந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் டப் என்று சத்தம் கேட்டது கொஞ்ச துரம் போய் பஸ் நின்றது. பஸ் நின்ற பிறகு பஸ்சில் இருந்து டிரைவரும், பஸ்சில் இருந்த 2–3 பேரும் இறங்கி வந்தார்கள்.

(2) அதற்கு பின்னிட்டு பஸ் அங்கு நின்றிருந்ததா, சென்றதா என்றால் நான் சுப்பிரமணி வீட்டிற்கு தகவல் சொல்ல போனேன். பஸ்சில் இருந்து யார் இறங்கி வந்தார்கள், டிரைவர் ஆகியோரை பார்த்தேன். ஆஜர் எதிரி தான் அந்த பஸ்சை ஓட்டி வந்த டிரைவர் ஆவார். பஸ் சிறிது துரம் 25 –30 அடி சென்று தள்ளி நின்றது. நான் விபத்து நடந்த உடன் சுப்பிரமணி வீட்டிற்கு தகவல் சொல்ல சென்றதால் எதையும் பார்க்கவில்லை என்றால் கீழே விழுந்து கிடந்ததை பார்த்துவிட்டு தான் சென்றேன். வழக்குச் சம்பவம் நடந்ததற்கும் நான் நின்ற இடத்திற்கும் 10 அடி வித்தியாசம் இருக்கும். பஸ் இடித்து தான் சுப்பிரமணி கீழே விழுந்தார் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றல் சரியல்ல பஸ் இடித்து தான் சுப்பிரமணி கீழே விழுந்தார். அடிபட்டிருந்த சுப்பிரமணியத்திற்கு தலை மற்றும் கையில் அடிபட்டிருந்தது.

(3) சம்பவ இடத்தில் நான் மட்டும் இருந்தேனா என்றால் நான் சொல்லி தான் சுப்பிரமணியின் உறவினர்கள் வந்தார்கள். போலீசாரிடம் நான் கொடுத்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள வினோத் மற்றும் வேல்முருகன் ஆகியோர்களை தெரியுமா என்றால்

பஸ்சில் இருந்து இறங்கி வந்த போது பார்த்ததில் தெரியும். வினோத் மற்றும் வேல்முருகனிடம் வழக்குச் சம்பவம் பற்றி பேசினேனா என்றால் இல்லை. இந்த வழக்குச் சம்பவத்தை நான் நேரடியாக பார்த்திருந்தால் நான் வினோத் மற்றும் வேல்முருகனை விசாரணை செய்ய வேண்டிய அவசியமில்லை நான் சத்தம் கேட்ட பிறகு தான் சம்பவ இடத்தை பார்த்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்குச் சம்பவத்திற்கு சம்மந்தம் இல்லை போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.12.12 11:08:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 184/2022 |
| Name | : Velumurugan |
| P.W. | : 5 |
| Father Name | : Ponnusamy |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.12.2024

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கணியூரில் குடியிருந்து வருகிறேன். நான் பொதுப்பணித்துறையில் ஒப்பந்ததாராக பணிபுரிந்து வருகிறேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு காலை 05.00 மணியளவில் நான் ஈரோட்டில் இருந்து பழனி வந்து பழனியில் இருந்து மடத்துக்குளம் வந்து மடத்துக்குளத்தில் இருந்து வீட்டிற்கு போக வேண்டி 14 நெ. அரசு பஸ்சில் ஏறிச் சென்று கொ்ண்டிருந்த போது செந்தில் வே பிரிட்ஜ்யை தாண்டி டம் என்று ஒரு சத்தம் கேட்டது. அதன் பிறகு பேருந்து 100 அடி துரம் தள்ளி நின்றது. டிரைவர், கண்டக்டர் எல்லாரும் இறங்கினார்கள். நானும் வீடு பக்கம் என்பதால் அந்த இடத்தில் இறங்கினேன். சென்று பார்த்த போது பெரியவர் அடிப்பட்டிருந்தார். அடிப்பட்டவர் வீட்டில் இருந்து அவரது மகன் வந்துவிட்டார். அவரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். நான் வந்த பேருந்தின் ஓட்டுநரை பார்த்தேன். அவர் ஆஜர் எதிரி தான் ஆவார். இது சம்மந்தமாக போலீசார்

என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இந்த வழக்குச் சம்பவம் மடத்துக்குளத்தில் இருந்து தாராபுரம் செல்லும் போது செந்தில் வே பிரிட்ஜ் தாண்டி 10 அடி துரத்தில் காலை 05.15 மணிக்கு விபத்து நடந்தது. சம்பவத்தின் போது நான் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். சத்தம் கேட்ட போது பஸ் கொஞ்சம் தள்ளி நின்ற பிறகு டிரைவர் , கண்டக்டர் இறங்கி பார்த்த போது நான் போய் பார்த்தேன். நான் போய் பார்த்த போது பக்கத்தில் உள்ளவர்கள் வந்துவிட்டார்கள். ஆம்புலன்ஸ் வரச் சொல்லி அடிப்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். பஸ் எவ்வளவு துரம் தள்ளி நின்றது என்றால் 100 மீட்டர் தள்ளி நின்றது. நான் அடிப்பட்டரை போய் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. அதற்கு பின்னிட்டு சம்பவம் பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அதற்கு பிறகு பேருந்தில் பயணம் செய்தேனா என்றால் இல்லை அருகில் வீடு இருந்ததால் நான் இறங்கிவிட்டேன். பேருந்தில் இருந்தவர்கள் இறங்கி பார்த்தார்கள். பார்த்துவிட்டு பேருந்தை எடுத்துச் சென்றுவிட்டார்கள்.

(2) ஆம்புலன்ஸ் வந்து அடிப்பட்டவரை அழைத்துச் சென்ற பிறகு தான் பேருந்து புறப்பட்டு சென்றது. நான் பஸ்சில் துங்கிக்கொண்டிருந்தேன். எழுப்பிய பிறகு தான் பஸ் நின்றது தெரிந்தது. நான் போலீசாரின் வாக்குமூலத்தில் எனக்கு அறிமுகமான மருதமுத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவரை ஆள் தெரியும் பெயர் தெரியாது. நான் நடந்து வரும் போது மருதமுத்துவிடம் பேசினேனா என்றால் பேசினேன் அதற்கு பிறகு தான் அடிப்பட்டவர் அந்த பகுதியைச் சேர்ந்தவர் என எனக்கு தெரியும். எதிரிக்கும் இந்த வழக்குச் சம்பவத்திற்கு சம்மந்தம் இல்லை போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.12.12 11:08:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்